முற்பகல் 11-45

(7) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் வேளாண்மைத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த ஐம்பத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்றுப் பதினாறாவது அறிக்கை.

(8) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த ஐம்பத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்றிப்பதினேழாவது அறிக்கை.

(9) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984–85 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் தொழில் துறை தொடர்பான பத்திகளின் மீது குழுவின் நூற்றிப் பதினெட்டாவது அறிக்கை.

நன்றி, வணக்கம்.

(ஆ) மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கா. ப. பட்டாபிராமன், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1992–93 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 14, 15, 16 மற்றும் 17 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன். போதிய அவகாசம் இன்மையால் 14, 15 மற்றும் 17-வது அறிக்கைகளின்படியெடுத்த நகல்கள் சட்டமன்றப் பேரவை நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகள் அச்சிடப்பட்டு கிடைக்கப்பெற்றவுடன் உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி டி. சக்குபாய் தேவராஜ், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பாக.

1993 ஏப்ரல் 23]

திருமதி டி. சக்குபாய் தேவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 20-வது, 21-வது, 22-வது 23-வது. 24-வது மற்றும் 25-வது அறிக்கைகளைக் குழுத் தலைவரின் சார்பில் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. மானியக் கோரிக்கைகள், 1993–94, விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 13— நீதி நிருவாகம்.

(ஆ) கோரிக்கை எண் 14— சிறைச்சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993–94 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 13— நீதி நிருவாகம். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 48,63,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்", எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப்படவில்லை. மானியக் கோரிக்கை எண் 14— சிறைச்சாலைகள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 24,14,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்", எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் எவரும் இருக்கையில் இல்லாத காரணத்தினால் வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப் படாததாகக் கருதப்படுகிறது.

மானியக் கோரிக்கைகள் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.